# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2224 - 2021 අප්‍රේල් මස 16 වැනි සිකුරාදා - 2021.04.16

*2224 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 854 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 859 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 855 | ஏல விற்பனைகள் | 860 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 857 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


853 - B 082222 - 405 (2021/04)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

இரண்டு எண்ணிக்கையான M8 CLASS LOCOMOTIVE ENGINE COMPLETE, TYPE ALCO/ DLW 16 - CYL. 251-B என்பதற்கான பெறுகை

பெறுகை இலக்கம்: SRS /F. 7667

01. இலங்கை, பத்தரமுல்லை, செத்சிறிபாய, படிநிலை II , 7ஆம் தளம், போக்குவரத்து அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுத் தலைவரினால் இரண்டு எண்ணிக்கையான M8 CLASS LOCOMOTIVE ENGINE COMPLETE, TYPE ALCO/ DLW 16 - CYL, 251-B என்பதை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது ஏனைய திறமையான நிறுவனங் களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக் கொள்வார்.

விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது அற்றோணித் தத்துவம் அளிக்கப்பட்டவர்களுமான அதிகாரமளிக்கப்பட்ட இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

02. 2021.05.17 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு ( இலங்கை நேரம்) விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.

03. இலங்கை ரூபாவில் நாற்பத்தையாயிரம் ரூபாவை (ரூபா 45,000.00) பெறுகைக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2021.03.31 ஆந் திகதி முதல் 2021.05.13 ஆந் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ( இலங்கை நேரம்) இலங்கையில், கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சி அத்தியட்சக்ரின் அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் . மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் வெளிநாட்டு விலைமனுதாரார்கள் நாற்பத்தையாயிரம் (ரூபா 45,000.00) இலங்கை ரூபாய்க்குச் சமமான தொகையை தங்கள் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலயங்களுக்கு இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தலாம் மற்றும் இலங்கைத் தூதரகத்தின் ஊடாக இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகருக்கு ஆவணங்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக் கட்டணமான நாற்பத்தையாயிரம் இலங்கை ரூபா (ரூபா 45,000.00) ( அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக் கூடியதுமான வெளிநாட்டு நாணயம்) மீளளிக்கப்படமாட்டாது.

04. விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தொகைக் கான விலைமனுப் பிணை முறியொன்று விலை மனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் தேவையான விலைமனுப் பிணை முறி நிர்ண யிக்கப்பட்ட நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாளுக்கு 28 நாட் களுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட நாணயப் பரிமாற்ற விகிதத்திற்குச் சமமாக இருத்தல் வேண்டும்.

05. இலங்கை, பத்தரமுல்லை, செத்சிறிபாய, படிநிலை II, 7 ஆம் தளம், போக்குவரத்து அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2021.04.29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கோரலுக்கு முன்னாரன கூட்டம் இடம்பெறும்.

06. இலங்கை, பத்தரமுல்லை, செத்சிறிபாய, படிநிலை II, 7 ஆம் தளம், போக்குரத்து அமைச்சில் வைத்து விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமா கவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருப வருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான
பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
7 ஆம் தளம், செத்சிறிபாய, II ஆம் படி நிலை,
பத்தரமுல்லை, இலங்கை.

08. விலைமனு ஆவணங்களை, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் தயவு செய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும்.

09. மேலதிக தகவல்களுக்குப் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய திணைக்களம்,
த.பெ. இல. 1347,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11)2438078 அல்லது 94(11) 2436818

தொலைநகல்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
gmrslr@sltnet.lk

இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட
நிலையான பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

குறிப்பு இலக்கம் : SRS/F. 7667

4- 523

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.04.24ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சி. ரிஸ்வான்,
நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

2021.03.30.

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்

| தொ இல. | வழக்கி கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | AR/264/20 | EP JK - 2437 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்துக்காக மட்டும்) | 01 |
| 2. | AR/693/20 | EP BEM - 4913 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | AR/694/20 | EP JW - 8544 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | AR/695/20 | EP TB - 9222 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்துக்காக மட்டும்) | 01 |
| 5. | 38343/PC | EP HP - 9835 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 61106/MT/20 | EP GU - 7870 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | 62066/MT/20 | EP UH - 3211 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 10. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 11. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14. | B/885/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15. | AR/43/20 | | அலுமினிய பிறேம் | 03 |
| 16. | AR/116/21 | | அடுப்பு | 02 |
| 17. | 62767/S/20 | | தோணி | 01 |

| தொ இல. | வழக்கி லக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 18. | 62768/S/20 | | தோணி | 01 |
| 19. | 62786/S/20 | | சவள் | 01 |
| 20. | 62970/S/20 | | சவள் | 01 |
| 21. | 62954/S/20 | | சவள் | 01 |
| 22. | 62969/S/20 | | சவள் | 01 |
| 23. | 62356/S/20 | | சவள் | 01 |
| 24. | 21539/PC/13 | | சவள் | 01 |
| 25. | 47708/PC/17 | | கையடக்கத் தொலைபேசி | 02 |
| 26. | 42510/PC/16 | | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 27. | No Number | | துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகம் | 01 |
| 28. | 51701/S/20 | | குளிர்சாதனப் பெட்டி ஸ்டான்ட் | 01 |
| 29. | 51701/S/20 | | குளிர்சாதனப் பெட்டி ஸ்டான்ட் | 01 |
| 30. | 51701/S/20 | | குளிர்சாதனப் பெட்டி ஸ்டான்ட் | 01 |

*04-595*

---

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - ஏறாவூர்

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

*ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஆற்று மணல் 241.5 கியூப் மற்றும் ஊத்த மண் 77 கியூப் என்பன 2021.04.24ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.*

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

கே. ஜீவராணி,
மேலதிக நீதிவான்,
சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்.

*2021.03.30.*

*4- 579*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2021 - 2022

*2021.07.01ஆந் திகதி தொடக்கம் 2022.06.30 ஆந் திகதி வரை*

2021, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2022 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட படிவமாக இருக்க வேண்டும் . மேலும் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை புத்தளம் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் குறைந்தபட்சம் 15 % பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக தயாரிக்கப்பட்டு மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................ இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2021.05.03ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2021.05.03ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணையின் மீள் விற்பனை 2021.06.03 ஆந் திகதி மு. ப.10.30 மணிக்கு மீண்டும் நடைபெறும். அன்றைய தினம் விண்ணப்பங்கள் வர்த்தமானி அறிவித்தலின் படி அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஏ.வை.ஆர்.ஜயதிலக,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2021,.04.01.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக் குடியிருப்பு | மு.ப. 10.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 9.00 மணி | 2021.05.03<br>மு.ப.10.30 | 1,000.00 |

4-609

## முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை -2021/2022*

*2021, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2022 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளாவாறான கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2 முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை முந்தல் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2021.05.17 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2021.05.17 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*6. முன்னர் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன கள்ளுத் தவறணைகள் 2021.06.21 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அத்தினத்திற்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைத்தல் முன்னர் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடைபெறும்.*

*7. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*
*தொலைபேசி இல. 032- 2052271.*

*ஜே. ஏ. விஜானி வசன்திகா,*
*பிரதேச செயலாளர்,*
*முந்தல்.*

*பிரதேச செயலகம்,*
*முந்தல்,*
*2021.03.30.*

**அட்டவணை**

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 1. | முந்தல் | முந்தல் | மு.ப. 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2021.05.17 | ரூ.1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 2. | முந்தல் | மதுரங்குளி | மு.ப. 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2021.05.17 | ரூ.1,000.00 |
| 3. | முந்தல் | முக்கு தொடுவாவ | மு.ப. 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2021.05.17 | ரூ.1,000.00 |
| 4. | முந்தல் | உடப்பு | மு.ப. 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2021.05.17 | ரூ.1,000.00 |

4- 548

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* கஸ்தானே சிலோன் (பிறைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்:* பீவீ 00235936
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2021.03.05
*பதிவு முகவரி :* இல. 359/1A, காலி வீதி, கல்கிஸ்ஸை, ரத்மலானை

சபையின் கட்டளைப் பிரகாரம்,
கிரேகரிஸ் பார்ட்னர்ஸ்,
கம்பனிச் செயலாளர்.

53/3B, கிரேகரிஸ் ரோட்,
கொழும்பு -07.

4-382

---

### கம்பனிப் பெயர் மாற்ற அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி தனது பெயரை 2021, மாச்சு 18 ஆந் திகதியன்று மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.-

*கம்பனியின் முந்தைய பெயர்:* டென்ட்சு ஏஜிஸ் நெட்வர்க்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இல.:* பீவீ 2572
*பதிவு முகவரி:* இல. 176/1, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு -05
*கம்பனியின் புதிய பெயர் :* டென்ட்சு கமியுனிகேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ்
செக்கரட்ரியல் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்.

03 ஆம் மாடி,
இல.11, காசல் ஒழுங்கை,
கொழும்பு-04.

4-392

---

### விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு - 11, செட்டியார் தெரு, இல. 247 இல் வசிக்கும் சாவன்னா நாச்சிஅப்பா குமாரப்பன் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி அம்பகஹஹேவகே தோன மஞ்சுளா தமயந்தியினால் 2009, திசெம்பர் 21 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய இல. 272 விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது அற்றோணி தத்துவக்காரராக, புத்தளம், மதுரங்குளி, பன்சல வீதி, இல. 176 இல் வசிக்கும் (தே.அ.அ.இல. 603393791V) சிறிமெதுரலாகே சந்ரசிறி என்பவரை நியமித்து இருந்தேன். மேற்படி இல. 272 இன் விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2020, நவெம்பர் 03 ஆந் திகதி முதல் செயற்படுவது இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாகவும், மேலும் மேற்படி விசேட அற்றோணித் தத்துவத்தில் எந்த

செல்லுபடியும் அல்லது சட்ட ரீதியான வலுவும் இல்லை என்பதை சகலருக்கும் அறிவிக்கிறேன்.

சாவன்னா நாச்சிஅப்பா குமாரப்பன்.

4-440

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹொங்கொங் விஷேட நிருாக மக்கள் சீன குடியரசு கடவுச்சீட்டு இல. கேஜே 0733457 என்பதன் உரமையாளரான யு சா அன் என்பவருக்கு 2019, ஏப்பிறல் 09 ஆந் திகதியிடப்பட்டு டோஹா கட்டார் இலங்கை தூதுவராலய இலங்கை தூதுவரின் உடனிருப்பவரின் (attache) முன்னால் 2019.05.20 ஆந் திகதியன்று நிறைவேற்றப்பட்டு 2019.06.04 ஆந் திகதியன்று பத்தரமுல்லை, பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் எழுத்துமூல அதிகாரம் பெற்ற அலுவலர்களினால் பேணப்படும் 275 ஆம் பாகம், 99 ஆம் பக்கத்தில் 8806 என்ற இலக்கமுடைய நாட் புத்தகத்தில் பதியப்பட்டு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது 2020, ஒற்றோபர் 06ஆந் திகதியிலிருந்து செயல்படும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதுடன் எமது அற்றோணித் தத்துவக்காரராக அவரின் நிலையில் மேற்கூறப்பட்ட யு சா அன் என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை அல்லது செயற்பாட்டிற்கும் நாம் பொறுப்பேற்க மாட்டோமென டோஹா கட்டார் , த.பெ.இல. 22550, கட்டார் விமானசேவை குழுமத்தின் அக்பார் அல் பாக்கர் ஆகிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் தெரிவிக்கின்றேன்.

அக்பார் அல் பாக்கர்.

4-491

---

### ரோயல் செரமிக்ஸ் லங்கா பி.எல்.சி.
### (நிறுவன பதிவு எண் PQ 125)
### இல.20, ஆர்.ஏ.டி.மெல் மாவத்த, கொழும்பு 03.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் பிரிவு 127 இன் படி, நிறுவனத்தின் பங்குப் பதிவு 2021, ஏப்பிறல் 20 செவ்வாய்க்கிழமை முதல் 2021, ஏப்பிறல் 22 வியாழக்கிழமை வரை ( இரண்டு நாட்களும் உள்ளடக்கியது) மூடப்படும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் ஆணைப்படி,

ரோயல் செரமிக்ஸ் லங்கா பி.எல்.சி.
பி. டபிள்யூ. கார்ப்பரேட் செகடெரியல்
(பிரைவேட் ) லிமிடெட்,

செயலாளர்கள்.

4-516

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டீ.ஜீ.ஜே. ஆர். புஷ்பகுமார
கணக்கு இல.0022 5002 0530

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.10.29ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.10.19ஆந் திகதிய “திவயின” (Divaina), “ஐலண்ட்” (Island), “தினக்குரல்” (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித் தல்களுக்கிணங்க நிலுவை முதலான பத்து கோடியே இருபத்தி எட்டு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து முந்நூற்று எண்பத்தி ஆறு ரூபா எட்டு சதம் (ரூபா 10,28,83,386.08) 2020, திசெம்பர் 02 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 3286, 3623, 3466 மற்றும் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒன்பது கோடியே மூன்று இலட்சத்து எண்பத்தி ஆறாயிரம் ரூபா (ரூபா 9,03,86,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு வீதம் (14%) மேலும் முப்பத்தி ஐந்து இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 35,10,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 3286, 3623, 3466 மற்றும் 3468 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.31 ஆந் திகதி அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மு.ப. 11.15 மணிக்கும், அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மு.ப. 11.45 மணிக்கும், அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பி.ப. 12.15 மணிக்கும் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நசர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர்

பிரிவின் மற்றும் சீதாவக்கை இல. 432 B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ்ஸாவலையில் அமைந்த "மில்லகாஹாகும்புர எனும் கோன்காஹாகும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட (2010, ஏப்பிறல் 21 – 23 உப பிரிவும் மீள் அளவீடுமாகும்) இல. 4827 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு: இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1; கிழக்கிற்கு: இங்கு லொட் 2; தெற்கிற்கு: வீதி மற்றும் மேற்கிற்கு: வீதி மற்றும் இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி மூன்று தசம் எட்டு ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 33.875பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4827 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 243/101 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3286 மற்றும் 3623 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் சீதாவக்கை இல. 432/B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ் ஸாவலை இரத்தினபுரி வீதியில் அமைந்த "ஹல்காஹாகும்புர மற்றும் மில்லகாஹாகும்புர கோன்காஹாகும்புரவின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, நவெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட (2019, யூன் 21 எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட) இல. 4002 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கு : டீ. ஜே. பீ. ரோஷான் குமார என்பவர் உரிமம் கோரும் இல. 5030 எனும் வரைபடத்தின் லொட் 1 A ; கிழக்கு : ஆறு கலகாஹாவத்த எனும் மினெரல் ஸ்பிரிங் எஸ்ட்டேட்; தெற்கு : இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 3 மற்றும் மேற்கிற்கு வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி ஒன்று தசம் நான்கு ஒன்பது பேர்ச் (0ஏ. 1றூ. 31.49பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4002 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 282/57 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3466 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் சீதாவக்கை இல. 432 B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ்ஸாவலையில் அமைந்த "மில்லகாஹாகும்புர எனும் கோன்காஹாகும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட (2010, ஏப்பிறல் 21 - 23 உப பிரிவும் மீள் அளவீடுமாகும்) இல. 4827 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு : இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : இல. 1449 எனும் வரைபடத்தின் லொட் A ; தெற்கு : வீதி மற்றும் மேற்கு : இங்கு லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஒன்பது தசம் ஏழு எட்டு ஐந்து பேர்ச் (0ஏ.1றூ. 9.785பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4827 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 280/32 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3468 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 524

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

வை.பீ .ரீ.கே. பீரிஸ்
கணக்கு இல.1105 5430 7391

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.03.19ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.03.05ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித் தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபது இலட்சத்து பதினோராயிரத்து நாநூற்று எண்பத்தி ஒன்பது ரூபா ஐம்பத்து ஒன்பது சதம் (ரூபா 70,11,489.59) 2020, நவெம்பர் 10 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச்

செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றி ஏழாயிரத்து ஐந்நூற்று ஐந்து ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூபா 59,97,505.59) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4395 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.25 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நாவுல பிரதேச செயலாளர் பிரிவின் உதேசிய பத்துவின் வகபனாஹறா மற்றும் நாவுல பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் கரவிலஹேன கிராம அலவலர் பிரிவின் கரவிலஹேன கிராமத்தில் அமைந்துள்ள "லினியகொள்ளேயாய எனும் லினியகொள்ளயாய" என்றழைக் கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ.கே. கே. ஏக்கநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, திசெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 1144 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக் கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: வீடுகளுக்கான வீதி; கிழக்கு: எஸ். கே. குணவர்தன என்பவர் உரிமை கோரும் FVP 257 இன் லொட் 386; தெற்கு: ஆர் பெரேரா என்பவர் உரிமை கோரும் FVP 257 இன் லொட் 385 இலிருந்து எடுக்கப்பட்ட லொட் B மற்றும் மேற்கு: நாவுல முதல் பல்லேகம வரையான நெடுஞ்சாலை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: இரண்டு றூட்கள் மற்றும் பதினெட்டு பேர்ச் (0ஏ.2றூ.18பே.) அல்லது 0.2478 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு காணப்படுகின்ற அனைத்தும், நிலம் ,மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1144 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 1144 ஐ ஏற்ற வரைபடத்தின் கூறப்பட்ட லொட் A கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அறவீடாகும்.

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், நாவுல பிரதேச செயலாளர் பிரிவின் உதேசிய பத்துவின் வகபனாஹறா மற்றும் நாவுல பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் கரவிலஹேன கிராம அலுவலர் பிரிவின் கரவிலஹேன கிராமத்தில் அமைந்துள்ள "லினியகொள்ளேயாய எனும் லினியகொள்ளயாய" என்ற ழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, ஓகத்து 18ஆந் திகதியிடப்பட்ட இல. 1177 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன-வடக்கு: வீதிக்கான ஒதுக்கம்; கிழக்கு: எஸ். கே. குணவர்தன என்பவர் உரிமை கோரும் FVP 257 இன் லொட் 386; தென்கிழக்கு: ஆர்.பெரேரா என்பவர் உரிமை கோரும் FVP 257 இன் லொட் 385 இன் பிரிக்கப்பட்ட லொட் B மற்றும் வடமேற்கு: நாவுல முதல் பல்லேகம வரையான நெடுஞ்சாலை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்: இரண்டு றூட்கள் மற்றும் பதினெட்டு பேர்ச் (0ஏ.2றூ.18பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு காணப்படுகின்ற அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1177 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q25/111 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 525/1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர். டபிள்யூ. எம். பீ. பீ. விஜேமான்ன
கணக்கு இல. 0123 5000 3256

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.08.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.10.11ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.10.07ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐம்பத்தி நான்கு இலட்சத்து ஐந்நூற்று நாற்பத்தி ஒரு ரூபா தொண்ணூ ற்றி ஏழு சதம் (ரூபா 54,00,541.97) 2019, ஓகத்து 01 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தி இரண்டு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் ரூபா (ரூபா 52,62,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஐந்து தசம் ஐந்து வீதம் (15.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட 2019, மே 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 00362516864 ஐ ஏற்ற உரித்து உறுதி சான்றிதழ் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2021.05.19 ஆந் திகதி மு.ப. 10.30

மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவரவின் கங்கபலாத்த கோரளே உடுநுவர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் யலேகொட கிழக்கு இல. 11 கிராம அலுவலர் பிரிவின் யலேகொட கிழக்கில் அமைந்த "மஹாகும்புரே வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு நிலஅளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 320285 எனும் கெடஸ்த்தர் வரைபடத்தில் இல. 03 எனும் கட்டத்தில் காட்டப்பட்ட Parcel 0016 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : பார்சல் 15 ; கிழக்கு : சங்கபோகம முதல் பிலிகல்ல வரையான பிரதேச சபை வீதி; தெற்கு : பார்சல் 17 மற்றும் மேற்கு : பார்சல் 20, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் இரண்டு ஏழு ஒன்பது ஹெக்டேயர் (0.0279 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 320285 எனும் கெடஸ்த்தர் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப் பதிவகத்தில் உரித்து உறுதி இல. 00362516864 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 525/2

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

செவன்டீன் சீ சிலோன் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல. 0113 1000 0509

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.09.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.02.16ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2018.03.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இரண்டு கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஒன்பதினாயிரத்து எண்ணூற்றி ஏழு ரூபா தொண்ணூற்றி நான்கு சதம் (ரூபா 2,67,79,807.94) 2017, செத்தெம்பர் 04 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா1,50,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு வீதம் (16%) மேலும் தொண்ணூற்றி இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 92,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் ஆறு தசம் ஐந்த வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.10 ஆந் திகதி பி.ப. 3.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பியகம பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பியகம பிரதேச சபை எல்லைகளுக்குள் பாஹால பியன்வில கிராம அலுவலர் பிரிவின் இஹல பியன்வில மற்றும் பாஹால பியன்விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/5 ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ எஃப் ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 9027 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : எச் எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : லொட் 2 (12 அடி அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 9027 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் என் 308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2007, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்திற்கு அமைவாக அண்மைய நிலஅளவீட்டிற்கு அமைய கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இஹல பியன்வில மற்றும் பாஹால பியன்விலவில் அமைந்த மங்கட வீதி, வரிமதிப்பீட்டு இல. 61/5 ஐ ஏற்ற "தம்புகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ்.

பெரேரா அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2017, மாச்சு 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன : வடகிழக்கு: எச். எசிலின் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ; தென்கிழக்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தென் மேற்கு : அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வடமேற்கு : இல. 9027 எனும் வரைபடத்தின் லொட் 2 (12 அடி அகல வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சுகள் (0ஏ.0றூ.30பே.) அல்லது 0.0759 ஹெக்டயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2750 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N308/08 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4-525/3

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

இசுருசிரி மோட்டார்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல. 0057 1000 4511

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.09.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.11.01ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.10.25ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு ரூபா இருபத்தி ஒன்பது சதம் (ரூபா1,38,74,881.29) 2019, ஓகத்து 31 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே முப்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று நாற்பத்தொரு ரூபா தொண்ணூற்றி எட்டு சதம் (ரூபா 1,32,49,641.98) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 1825 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.20 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரைகம் கோரளே உடுகாஹா பத்து ஹொரண பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவின் வகவத்த இல. 618 கிராம அலுவலர் பிரிவின் களுபாஹான கிராமத்தில அமைந்த "பெரவாகொட" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஆர். கினிகே என்ப வரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 2135 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் மீள் அளவீடான மற்றுமொரு விதத்தில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டபிள்யு. டீ. சந்ராணி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, ஏப்பிறல் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 700 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் மீள் அளவீடும் அவ்வாறே உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ஓ. ஓர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1943, ஓகத்து 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 3273 எனும் வரைபடத்தில் லொட் 3 மற்றும் 7 இன் ஒன்றிணைப்பான) உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஆர். கினிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 2135A எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி; கிழக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஆர். கினிகே என்பவரால் தயாரிக்கப் பட்ட 2015, ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 2135 எனும் வரைபடத்தில் லொட் 2, இங்கு லொட் 1 B மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ஓ. ஓர் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 3273 எனும் வரைபடத்தில் லொட் 5 மற்றும் 8; தெற்கு: இல. 3273 எனும் வரைபடத்தின் லொட் 5 மற்றும் 8 மற்றும் பிட்ட ஆறு மற்றும் ; மேற்கு: இல. 3273 எனும் வரைபடத்தின் லொட் 6 மற்றும் 2, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் இரண்டு றூட் மற்றும் பதின் எட்டு தசம் எட்டு சைபர் பேர்ச் (1ஏ. 2றூ. 18.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2135A எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹொரண காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 15/124 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4- 546

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. -கிரிபத்கொட கிளை

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

